# கற்பகம்

திங்கள் இதழ்

Katpakam

விலை ரூபா 10.00


## குறளமுதம்–69

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதத் தரும்.

**அதிகாரம்-6 அறத்துப்பால் மக்கட்பேறு**

ஈன்றபொழுதிற் பெரிதுஉவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய்

தன் மகனை கல்வி கேள்விகளில் நிறைந்தவன் என்று அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாய், தான் அவனைப் பெற்றெடுத்த பொழுதைவிடப் பெரிது மகிழ்வாள்.


மலர்-06 செப்ரெம்பர் -2013 இதழ்-69


### பனை தென்னை நிறுவனங்களின் பிரச்சினைகள் தொடர்பில்

# முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன!

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட பாரிய யுத்த அனர்த்தங்களின் நெருக்கடிகள் தணிந்துள்ள தற்போதைய நிலையில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் போட்டி நிலைமைகளையும் சந்தித்து வருகின்றன.

குறிப்பாக கலால் வரி, சாராய உற்பத்தி வரி, போத்தற்கள் உற்பத்தி வரி மற்றும் கிளைகளை அகற்றவேண்டிய நிர்ப்பந்தங்கள், கமத்தொழில் காப்புறுதிதிட்ட உதவிகள் நிறுத்தம் போன்ற பல்வேறு பிரச்சினைகளை இத்துறைசார் நிறுவனங்கள் எதிர்நோக்குகின்றன.

இப்பிரச்சினைகள் தொடர்பிலும் அவற்றின் தீர்வு தொடர்பிலும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சார்பில் முன்மொழிவுகள் ஜனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் முன்னரான சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளருடனான கலந்துரையாடல் ஒன்று கொழும்பு நிதியமைச்சு செயலகத்தில் இம்மாதம் 10ம் திகதி நடைபெற்றபோது, பனை தென்னை வள நிறுவனங்களின் சார்பில் பண்டத்தரிப்பு சங்க பொதுமுகாமையாளர் திரு கி.குணரத்தினம் அவர்களும்,அச்சுவேலி சங்க பொது முகாமையாளர் திரு பொ.செல்வராசா அவர்களும் கலந்துகொண்டு இம்முன்மொழிவுகளை சமர்ப்பித்தனர்.

சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் தொடர்பான முழுவிபரம் வருமாறு, (6ம் பக்கம் பார்க்க)

## 91வது சர்வதேச கூட்டுறவுதின விழா போட்டிகள் அனைத்தும் நிறைவு!

91வது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு சமாசத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் இறுதிப் போட்டிகளாக துடுப்பாட்டப் போட்டி, கயிறிழுத்தல் போட்டி, சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி என்பன அண்மையில் நடைபெற்று முடிந்துள்ளன.

துடுப்பாட்டப் போட்டிகள் தாவடி ஸ்ரீகாளியம்பாள் விளையாட்டு மைதானத்திலும், கயிறிழுத்தல் போட்டிகள் யாழ். இளஞ்சிங்கம் சனசமூக நிலைய மைதானத்திலும், சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி சமாச கூட்டுறவாளர் மண்டபத்திலும் நடைபெற்றன.

இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் ஒக்டோபர் மாதம் 22ம் திகதி சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.





## கோண்டாவில் சங்கத்தில் கூட்டுறவுதின போட்டிகள்

91வது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அதன் உறுப்பினர்கள், பணியாளர் கள், மகளிர்குழு உறுப்பினர்கள் மற்றும் வலிகாமம் கொத்திணியின் உறுப்புரிமைச் சங்கங்களின் பணியாளர்கள் ஆகியோருக்கிடையே பல்வேறு போட்டிகளை நடத்தியுள்ளது.

(3ம் பக்கம் பார்க்க)

## சித்த மருத்துவ சங்கத்தின் நடமாடும் மருத்துவசேவை

யாழ்.மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் நடமாடும் மருத்துவ சேவை யாழ்ப்பாணம், அரியாலை, கோப்பாய், மானிப்பாய், சுன்னாகம் ஆகிய பனை தென்னை வள சங்கங்களில் நடைபெற்றுள்ளன. ஏனைய சங்கங்களில் இச்சேவை பின்வரும் திகதிகளில் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பளை 11.10.2013, பண்டத்தரிப்பு 25.10.2013, சங்கானை 01.11.2013, சாவகச்சேரி 15.11.2013, பருத்தித்துறை 06.12.2013, கரவெட்டி 13.12.2013, கொடிகாமம் தை 2914, காரைநகர் தை 2014, வேலணை மாசி 2014, அச்சுவேலி மாசி 2014, ஊர்காவற்றுறை பங்குனி 2014, வடமராட்சி கிழக்கு பங்குனி 2014, அனலைதீவு சித்திரை 2014 ஆகிய நாட்களில் நடைபெறவுள்ளது.

## கல்வி பயிற்சிக்கு ஏற்பாடு

சமாசத்தினால் சங்கங்களுக்கு வழங்கப்படும் கல்விப் பயிற்சியில் கொடிகாமம் சங்கத்தின் நெறியாளர்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி சங்கத் தலைவர் தலைமையில் இம்மாதம் 30ம் திகதி சங்க மண்டபத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சமாச கல்வி உத்தியோகத்தரால் தெரிவிக்கப்படுகின்றது.

**சிந்தனைத்துளி**

"இன்றைய சூரியனின் அஸ்தமனமானது நாளைய புதிய விடியலின் பிரசவத்துக் காகவே" -அறிஞர்-

# கற்பகக்கரு

## அரச உதவி அவசியம்!

பனை வளத்தினை நம்பி வாழும் பனந் தொழில் வல்லுநர்களால் ஒன்றுகூடி உருவாக்கப்பட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் 40ற்கு மேற்பட்ட வருடங்களைக் கடந்து செயற்பட்டு வருகின்றபோதிலும் இச்சங்கங்கள் உருவாக்கப்பட்டதன் முழுமையான நோக்கங்களை இன்னும் அடையவில்லை.

காலத்துக்கு காலம் அரச மாற்றங்கள், அரசியல் மாற்றங்கள் காரணமாக இச்சங்கங்களால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் பிரகடனங்கள், முன் மொழிவுகள் போன்றவற்றினை அரசோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களோ இன்னமும் முழுமையாக நிறைவேற்றவில்லை.

வடமாகான சமாசம் தன்னாலான பல நடவடிக்கைகளை, குறிப்பாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் ஆகியோரை அழைத்து ஆய்வுக் குழு கூட்டத்தை பல வருடங்களாக நடத்திய போதிலும் எதிர்பார்த்த பலனைப் பெறமுடியாது போனது மட்டுமன்றி அதிக நிதிச் செலவையும் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. தற்போது யாழ்.மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச் சபையால் ஒழுங்குசெய்யப்பட்ட சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளருடனான கலந்துரையாடல் இம் மாதம் 10ம் திகதி கொழும்பு நிதியமைச்சு செயலகத்தில் நடைபெற்றபோது, பனை தென்னை வள நிறுவனங்கள் சார்பில் அச்சுவேலி ப.தெ.சங்க பொதுமுகாமையாளர் திரு பொ.செல்வராசா, பண்டத்தரிப்பு ப.தெ.சங்க பொது முகாமையாளர் திரு கி.குணரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு சங்கங்கள் எதிர்நோக்கும் தற்போதைய பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள், மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பான விபரங்களை அறிக்கை வடிவில் நிதியமைச்சு ஊடாக ஜனாதிபதி அவர்களுக்கு கையளித்துள்ளனர்.

2014ம் ஆண்டுக்கான அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் எமது பனை வளம் சார்ந்த அபிவிருத்தி தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்படுமாயின் இத் துறைசார் நிறுவன உறுப்பினர்கள், பணியாளர்கள் அதிக பயன்பெற வாய்ப்புள்ளது.

மேலும் இந்நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளில் எமது நிறுவனத்துக்கு பாதிப்பை தருகின்ற வரி அறவீடுகள், கொத்தணி வடிசாலைகளில் தேங்கியுள்ள பெருந்தொகையான மதுசாரத்தினால் உரியவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாமையினால் பொருளாதார ரீதியில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நிறுவனங்கள், மாற்று உற்பத்தியான உபஉணவு உற்பத்தி, மற்றும் கள், பதநீரை பதப்படுத்தி ரின்னில் அடைப்பதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளையும், பொறித் தொகுதிகளையும் வழங்க வேண்டுமென்றும் முன்மொழிந்திருக்கின்றார்கள்.

இம்முன்மொழிவுகளை அரசு நிறைவேற்றுமாயின் இத்துறைசார்ந்தவர்கள் அனைவரும் பொருளாதார ரீதியில் வளம் பெற்றவர்களாக திகழ்வார்கள் என கற்பகம் எதிர்பார்க்கின்றது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்" ஆசிரியர்

# ஔவையின் "கல்வியொழுக்கம்"

கல்விக்கு அடிப்படை ஒழுக்கம். பளபளப்பிலும், படோடோபத்திலும் கிடைப்பதல்ல கல்வியொழுக்கம். அது எப்படி இருக்கவேண்டுமென்பதை அதே தலைப்பிலே அருளி இருக்கிறார் ஔவை மூதாட்டி. ஔவையின் தமிழ் நூல்கள் ஐம்பத்துக்கும் மேற்பட்டவையாகும். ஆனால் ஏழெட்டு நூல்களே இப்போது முழுமையாக இருப்பவை.

இதில் ஔவையின் 'கல்வியொழுக்கம்' நூலானது நூறாண்டு காலம் காணாமல்போய், சிலம்புச் செல்வர் மா.பொ.சி.யால் தேடிப் பதிப்பிக்கப்பெற்றதாகும்.

கல்வியொழுக்கம் வரிவரியாக அகர வரிசைப்படி பாடப்பட்டதாகும். இதில் 94ற்கு அதிக வரிகள் இருக்கலாம் என நம்பப்படுகிறது. ஆனால் தற்போதுள்ள நூலில் 85 வரிகளே காணப்படுகின்றது. அவை வருமாறு, **('சுடர்மணிக் கவிஞர்' வேம்பத்தூர் கிருஸ்ணன் பதிப்பித்த "கல்வியொழுக்கம்" நூலிலிருந்து...)**

1. அஞ்சு வயதில் ஆதியை ஓது.
2. ஆதியை ஓத அறிவுண்டாமே.
3. இனியது கொடுத்தே எழுத்தை அறி.
4. ஈட்டிய நற்பொருள் எழுத்தே ஆகும்.
5. உடைமை என்பது கல்வி உடைமை.
6. ஊமை என்பவர் ஓதாதவரே.
7. எழுதப்படுவது எழுத்தே ஆகும்.
8. ஏழை என்பவர் எழுத்தறியாதவர்.
9. ஐயம் ஏற்கினும் அறிவது எழுத்தே
10. ஒரு பொழுதாகிலும் ஓதி நன்கு அறி.
11. ஓதல் உடைமை வேதவித்தை.
12. ஔவியம் இல்லாதவர் ஆமெழுத்து அறிந்தவர்.
13. கண் உடையவர் கற்றவர்தாமே.
14. காவலன் எனினும் கணக்கை ஓர்ந்து அறி
15. கிடையாவுடைமை கல்வியுடைமை.
16. கீர்த்தியும் பெருமையும் கிடைப்பது கல்வி.
17. குறைவறக் கற்றவன் கோடியில் ஒருவன்.
18. கூர்மை என்பது குன்றாக் கல்வி.
19. கெடுப்பினும் கல்வி கேடுபடாது.
20. கேள்வியுடைமை தாழ்விலாச் செல்வம்.
21. கைப்பொருள் என்பது கசடறு கல்வி.
22. கொற்றவன் தன்னிலும் கற்றவன் உயர்ந்தவன்.
23. கோதறு கல்வி குவலயத் தருமே.
24. சகல கலைக்கும் தலைமை எழுத்தே.
25. சாத்திரங் கற்றவன் தன்னையறிந்தவன்.
26. சிறுமையில் கல்வி சிலையில் எழுத்து.
27. சீரிய தமிழை தெளிய ஓது.
28. சுற்றம் என்பது துகளது கல்வி.
29. சூட்சமும் தூலமும் தோன்றும் கல்வி.
30. சென்ற இடமெல்லாம் சிறப்பே கல்வி.
31. சேயன் என்பவன் தீங்கறக் கற்றவன்.
32. சைகையும் சமர்த்தும் தந்திடும் கல்வி.
33. சொல்லும் பொருளும் தோன்றக் கற்றறி.
34. சோம்பர் என்பவர் சொல் எழுத்தறியார்.
35. தகும் எழுத்தை அறிந்தவன் தலைவனாவான்.
36. தான் கற்றவற்றை சபையினில் ஓது.
37. திருந்த ஓதிடில் திருவுண்டாமே.
38. தீரக் கற்றவன் தேசிகனாவான்.
39. துறவோர் என்பவர் துரிசறக் கற்றவர்.
40. தூர்த்தர் என்பவர் சொல் எழுத்து அறியார்.
41. தெளிய ஓத திறமுண்டாமே.
42. தேசமும் நாடும் திருந்த ஓது.
43. தைக்கக் கற்றவன் சமர்த்தனாவான்.
44. தொன்னூல் முழுவதும் தோன்றக் கற்றறி.
45. தோழன் ஆவது தோர்விலாக் கல்வி.
46. நற்பொருள் கொடுத்து நன்றாய் ஓது.
47. நானிலம் முழுவதும் நயந்தருங் கல்வி.
48. நில்லாது எதுவும், நிலையே கல்வி.
49. நீச்சு அரிதாயினும் கற்பது நிலைமை.
50. நுண்பொருள் கொடுத்து நூல் பல அறி.
51. நூறாண்டாயினும் கல்வியை நோக்கு.
52. நெடுங்கடல் ஓடினும் நிலையே கல்வி.
53. நேராக் கல்வி நிலையாகாதே.
54. நையக் கற்பினும் நொய்ய நன்குரை.
55. நொந்து அறியாதவர் செந்தமிழ் கற்றோர்.
56. நோகாது உண்பவர் நும்பொருள் அறிந்தோர்.
57. பல்கலை கற்றவ(னி)ன் பகையை கைவிடு.
58. பாவலர் என்பவர் பழுதறக் கற்றோர்.
59. பிழையறக் கற்றவர் பெரியவராமே.
60. பூடும் செல்வமும் பெறத் தரும் கல்வி.
61. புரையறக் கற்றவன் புவி ஆள்பவனே.
62. பூமியில் செல்வம் புகழ் பெருங்கல்வி.
63. பெருமை பெறுவது பேசருங் கல்வி.
64. பேதை என்பவர் பெருநூல் அறியார்.
65. பையப் பைய படித்தே ஒழுகு.
66. பொருள் மிகக் கொடுத்துப் போதக் கற்றறி.
67. போதக் கற்றவன் புண்ணியஞ் செய்தவன்.
68. மன்னராயினும் மறைகளை ஓது.
69. மாசறக் கற்றோர் மாநிலம் ஆள்வர்.
70. மிகப் பெருஞ்செல்வம் விளைத்திடும் கல்வி
71. மீசுரம் கொடுத்து வித்தையை விரும்பு.
72. முத்தமிழ் தமக்கு மூப்பு இல்லை.
73. மூதறிவை உயர்த்தும் தீதில்லாக் கல்வி.
74. மெலியர் ஆயினும் வேண்டுவது எழுத்தே.
75. மேலோரென்ன வித்தையைக் கற்றறி.
76. மையறு கல்வி கைவிடாது ஓது.
77. மொழிவது அகர முதல் எழுத்தாமே.
78. மோக விகாரர் முன்னூல் பாரார்.
79. வழக்கறிவுறுத்தும் மாசறு கல்வி.
80. வாட்டம் தராது மறவாக் கல்வி.
81. வித்தை கல்லாதவர் வெறியராவார்.
82. வீரியம் பேசார் வித்தை அறிந்தோர்.
83. வெண்பா முதலாக விளங்கவே ஓது.
84. வேதம் முதலாய் விரைந்து அறிந்தது ஓது
85. வையகமெல்லாம் வாழ்த்தவே ஓது.



# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியில் பணியாளர்களின் பங்கு!

சு.சிவலிங்கம் - கல்வி உத்தியோகத்தர்,
கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று வளர்ச்சி பெற்ற ஒரு கூட்டுறவு அமைப்பாக திகழ்வதற்கு இச்சங்கங்களின் பணித்தொகுதி ஆற்றி வருகின்ற பங்கானது மிகப்பெரிதாகும். அந்த வகையில் இச்சங்கங்களின் வளர்ச்சியுடன் பணியாளர்களின் பங்கினை சற்று விரிவாக ஆராயுமிடத்து ப.தெ.வ.அ.கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிகின்ற பணித்தொகுதி அர்ப்பணிப்பு நிறைந்தவர்களாக விசுவாசம், பற்றுறுதி, சேவைநலன் மிக்கவர்களாக காணப்படுவதும் செயற்படுவதும் முதன்மைக் காரணிகளாக திகழ்கின்றன.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் குறைந்த பணித் தொகுதியினை கொண்டு உச்ச பயனை சங்கங்கள் பெற்றுவருவதுடன், இப் பணித்தொகுதியானது கூட்டுறவுத் திணைக்களத்தின் வழிகாட்டுதலுக்கு அமைவாகவும் சங்க பணிப்பாளர் சபையின் விருப்பம் சார்ந்த செயற்பாட்டாளர்களாகவும் பணியாற்றி வருவதுடன் நாளாந்த கடமைகளை உடனுக்குடன் நிறைவுசெய்து சங்கத்தின் உச்ச வளர்ச்சிக்கு ஒத்துழைப்புடன் பணியாற்றி வருகின்றனர்.

இந்த வகையில் ஏனைய நிறுவனங்களைவிட குறைந்த ஊதியமே பெற்றுக்கொள்ளுகின்ற பணித்தொகுதியானது தமக்கென நிர்ணயிக்கப்பட்ட கடமை நேரத்தைக் காட்டிலும் மேலதிக நேரத்தினை செலவு செய்வதுடன், இதற்கென எவ்வித மேலதிகமான ஊதியத்தினையும் பெற்றுக்கொள்ளாது தன்னலத்தை புறந்தள்ளி விட்டு சேவை மனப்பாங்குடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றி வருவதை காணக்கூடியதாக உள்ளது.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் அதன் அங்கத்தவர்கள் உற்பத்தியினை வழங்குவதுடன் நின்றுவிடுகின்றனர். அதன் பின்னர் பணித் தொகுதியின் பங்கானது மிகப் பெரிய பொறுப்பாகும். அதாவது சரியான கணக்கு வைத்தல், உற்பத்தியினை பழுதடையாமல் பாதுகாத்தல், உத்திகளை பயன்படுத்தி விற்பனை செய்தல், பாவனையாளர்களால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து அவற்றை தடுத்தல், அங்கத்தவர் மத்தியில் விழிப்புணர்வு, கல்வியறிவு, பற்றுறுதி, விசுவாசம், சேமிப்பு, சிக்கனம் ஆகியவைகளை போதித்தல் போன்ற பல்வேறு சேவைகளை பணியாளர்கள் ஆற்றிவருவதால் இச்சங்கங்கள் இன்று இலாபகரமான, முன்னேற்றகரமான வளர்ச்சிப் பாதையில் பயணித்துக்கொண்டிருப்பது கண்கூடு.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகின்ற பணியாளர்களில் கிளைப் பணியாளர்களது பங்களிப்பு தனித்து நோக்கவேண்டிய ஒன்று. இவர்கள் தமது கடமை நேரத்தில் பெரும்பகுதியினை கிளை நிலையத்தில் செலவிடுவதால் பல்வேறு பிரச்சினைகளுக்க முகம் கொடுத்து அத்தனை சவால்களையும் சமாளித்து கிளை நிலையங்களை பாதுகாத்து, வருவாயை ஈட்டி தருகின்றனர். இவ்வாறு தமது பங்களிப்பினை அர்ப்பணிப்புடன் செய்து வருகின்ற வேளையிலும் தாக்கப்படுகின்ற நிலையும் ஆங்காங்கே நடந்து வருவதை காணக்கூடியதாக உள்ள நிலையிலும் மனம் தளராது தமது பங்களிப்பினை செய்து வருகின்றனர்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் தமது சேவைகளை அர்ப்பணிப்புடன் செய்து வருவதால்தான் இச்சங்கங்கள் 40 ஆண்டுகளைத் தாண்டியும் வளர்ச்சிப் பாதையில் பயணித்துக்கொண்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

## மகளிர்குழு உறுப்பினர்களுக்கு கடன் வழங்க நடவடிக்கை

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் மகளிர்குழு உறுப்பினர்களுக்கு கிராமிய வங்கியின் ஊடாக 6% வட்டியில் ரூபா 10,000.00 வீதம் கடன் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான விபரங்களை உடனடியாக சங்கங்கள் வழங்கவேண்டுமென கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தலைமையில் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் கலந்துகொள்ளும் மாதாந்த மாநாட்டில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## உறுப்பினரின் மகனின் மருத்துவ செலவுக்கு நிதி கோரி கடிதம்

தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கத்தின் உறுப்பினரான திரு இ.சிவகுமாரின் மகனின் இருதய சத்திர சிகிச்சைக்கு நிதி கோரி கடந்த மாதம் அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் தொடர்பில் இம்மாதாந்த மாநாட்டில் ஆராயப்பட்டு, நிதியுதவி வழங்க ஆலோசிக்கப்பட்டதுடன், ஒவ்வொரு சங்கமும் குறைந்தது தலா ரூபா 3,000.00 வீதம் நிதி உதவி செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## கோண்டாவில் .......

1ம் பக்கத் தொடர்ச்சி

இதில் முதல் கட்டமாக 100m, 200m, 400m, 1500m ஓட்டப் போட்டிகளும், சாக்கு ஓட்டம், பணிஸ் சாப்பிடுதல், முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல் போட்டிகளும் நடைபெற்றன.

2ம் கட்ட போட்டிகளாக பேச்சு, கவிதை, பொது அறிவு, வினாடி வினா போட்டிகளும் நடைபெற்றன.

இப்போட்டிகளை யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

# நிகழ்வுகளின் நிழல்கள்

**பனை தென்னை வள அபி.கூட்டுறவுச் சங்கங்களின் 40வது ஆண்டு விழாசிறப்பு மலரான "கற்பகதரு" நூல் வெளியீட்டு விழாவின்போது............**





# சிறுவர்கள்

பா.மதனபாரதி,
அல்வாய்

சிறுவர்களின் உரிமைகள் பற்றிக் கூறும் ஐக்கிய நாடுகள் அமையத்தின் சமவாயம் ‘உலகம் முழுவதிலும் வாழும் 18 வயதுக்கு குறைந்த பிள்ளைகள் அனைவரும், அதாவது ஆண், பெண் இரு பாலாருமே சிறுவர்கள்’ என வரையறுக்கின்றது. சிறுவர்களின் விருத்தியிலும் நலனிலும் குடும்பம் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. அவர்களை வளர்த்து அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது பெற்றோர்களின் தலையாய கடமையாகும்.

சிறுவர்களின் உரிமைகளை மதித்து நடக்க வேண்டும் என்று உறுதிப்படுத்துவதற்கு தன்னால் இயன்ற எல்லாவற்றையும் செய்யவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இன்றைய சிறுவர்களே நாளைய உலகத்தை உருவாக்கப்போகின்றார்கள் என்பதனால் சிறுவர்களின் விருத்தியானது பொருத்தமான வகையில் மேம்படுத்தப்படவேண்டும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய அபிவிருத்தியின் சிற்பிகள், வெற்றியின் வேந்தர்கள், பண்பாட்டின் சிகரங்கள், உழைப்பின் யதார்த்தங்கள், நாளைய சமுதாயத்தின் தூண்கள், மொத்தத்தில் சிறுவர்கள் ஒரு தங்கப் புதையல்கள். சிறுவர்களை நாட்டைப் பாதுகாப்பது போல பாதுகாக்க வேண்டும்.

சிறுவர் துஷ்பிரயோகமானது இன்று அகில ரீதியில் அனைவரையும் கதிகலங்க வைக்கின்றது. சிறுவர்கள் மீது கவனத்தைத் செலுத்துங்கள். ஏன் இந்த அரசியல்வாதிகள், அரசுகள், இராணுவம், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியன ஆயுத மோதலின்போது எவ்வளவை நாசமாக்குகின்றார்கள். இதை எல்லாம் சிந்தித்துப் பாருங்கள். சிறுவர்களை வளப்படுத்துவதற்கு கொஞ்சமாவது சிந்தியுங்கள், செயற்படுங்கள்.

சிறுவர்கள் எழுதப்படாத வெள்ளைத் தாள்களைப் போன்றவர்கள். எதனையும் நம்புகின்ற, நம்ப வைக்கப்படக்கூடிய வஞ்சனையற்ற உள்ளம் கொண்டவர்கள். நம்பியவற்றை உச்சமாக விசுவாசிக்கவும், விசுவாசிப்பவனுக்காக தம்மை கண்மூடித்தனமாக அர்ப்பணிக்கவும் துணிந்தவர்கள். இப்படியான சிறுவர்களை பெற்றோராகிய நீங்களும் இவர்களை வழி நடத்துபவர்களுமே பாதுகாக்க வேண்டும்.

சிறுவர்கள் துடிப்பு மிக்கவர்கள், தூண்டிவிட்டால் துளியும் பின் நிற்காமல் எதையும் செய்யக்கூடியவர்கள் : நாளைய நாட்டை ஆளப்போகும் சிறுவர்களை நல்வழிப்படுத்தவேண்டியது உங்களது தலையாய கடமையாகும்.

சிறுவர்கள் தலைமைக்கு கட்டுப்பட்டவர்கள்: நன்மை-தீமை, ஆபத்து, பின் விளைவு எதையும் சிந்திக்காமல் நிறைவேற்றக்கூடியவர்கள்.

எவராலும் இலகுவில் தம் இலக்குகளுக்காக பயிற்றுவித்து இயக்கப்படக்கூடியவர்கள். ஆக்கமும் உத்வேகமும் தற்துணிவும் கொண்ட இச் சிறுவர்களை ஒரு ஆரோக்கியமான சமுதாயத்துக்கான விளை நிலம் ஆக்கவேண்டியவர்கள் நாங்களே.

எது விதைக்கப்படுகின்றதோ அதுவே நாளை செழித்து வளரும். அது நல்லதொரு பழமரமாகவும் இருக்கலாம் அல்லது நச்சு மரமாகவும் இருக்கலாம்.

எனவே சிறுவர்களை நாம் அனைவரும் நல்லதொரு பழ மரமாக நாளைய நாட்டை ஆளப்போகும் நற்பிரஜைகளாக உருவாக்குவோம்.

“நாளைய நாடு இன்றைய சிறுவர் கைகளிலே”

## யாருமேயில்லை!

ஒரு வயதில் அழும்போது
தாலாட்டுப்பாட தாய் வரவில்லை
ஐந்து வயதில் அழும்போது
அரவணைக்க தந்தை வரவில்லை
பத்து வயதில் அழும்போது
உரமூட்ட உறவுகள் வரவில்லை
இருபது வயதில் அழும்போது
கைப்பிடிக்க காதலன் வரவில்லை
முப்பது வயதில் அழும்போது
கட்டி அணைக்க கணவன் வரவில்லை
நாற்பது வயதில் அழும்போது
பெற்றெடுத்த பிள்ளைகள் வரவில்லை
இனிநான் அழப்போவதில்லை-ஏனெனில்
ஆறுதல்படுத்தி ஆதரவு தர
யாருமேயில்லை!

பா.மதனபாரதீ,
அல்வாய்.

## இருதய இரத்தக்குழாய் அடைப்பை நீக்கும் பானம்

தனது இதய வலிக்காக சிகிச்சைக்குச் சென்ற நோயாளி ஒருவர் பைபாஸ் சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டார். இந்நிலையில் நோயாளி ஆயுர்வேத மருத்துவர் சையது சாகிப்பை சந்தித்தார். ஆஞ்சியோ சோதனையில் இருதய இரத்தக் குழாயில் மூன்று இடங்களில் அடைப்பு இருப்பதாக, பைபாஸ் அறுவை சிகிச்சைக்கு நாள் குறிப்பிட்ட அவர், குறிப்பிட்ட ஒரு பானத்தை அருந்தும்படியும் பரிந்துரைத்தார்.

இருதய மருத்துவமனையில் பைபாஸ் அறுவைச் சிகிச்சைக்கு முதல்நாள் நோயாளியை பரிசோதனை செய்த மருத்துவர், அவருடைய முந்தைய பரிசோதனையை சரிபார்த்து வியந்தார். ஆச்சரியப்பட்டார். தன்னுடைய முந்தைய பரிசோதனைக்குப் பிறகு ஏதாவது மருந்து சாப்பிட்டீர்களா? என மருத்துவர் வினவினார். அந்த இருதய நோயாளி அருந்திய அந்தப் பானம் அவரது இரத்தக் குழாயிலிருந்த அடைப்புக்களை கரைத்துள்ளது. அந்தப் பானம் இதுதான். முடிந்தால் நீங்களே தயாரித்து அருந்திப் பாருங்கள் பயன்கிடைகிறதா என்று.

ஒரு கப் எலுமிச்சைச் சாறு, ஒரு கப் இஞ்சிச் சாறு, ஒரு கப் பூண்டுச் சாறு, ஒரு கப் அப்பிள் சைடர் வினிகர் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து, இளஞ்சூட்டில் 60 நிமிடம் கொதிக்க வைக்கும்போது 4 கப் 3 கப் ஆகக்குறையும். சூடு ஆறியவுடன் சாறு இருக்கும் அளவுக்கு சம அளவு இயற்கைத் தேனை கலந்து வைத்துக்கொள்ளுங்கள். நாள்தோறும் காலை உணவுக்கு முன் ஒரு தேக்கரண்டி பானத்தை அருந்துங்கள்.

# முன்மொழிவுகள் ................ 1ம் பக்கத் தொடர்ச்சி

மறைந்த பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கா அம்மையார் அவர்களின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் 1972ம் ஆண்டில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பனம் தொழிலில் ஈடுபடும் சீவல் தொழிலாளர்களின் நன்மை கருதி கூட்டுறவுச் சங்க அமைப்பு உருவாக்கப்பட்டது.

இதில் யாழ்.மாவட்டத்தில் 19 ஆரம்ப சங்கங்களும், இரண்டாம்படி அமைப்புகள் 05உம் இயங்கி வருகின்றன. 4,000 சீவல் தொழிலாளர்களும் 1,000 பணியாளர்களும் 250 முன்பள்ளி ஆசிரியர்களும் செயற்பட்டு வருகின்றனர். இவர்களைச் சார்ந்த சுமார் 8,000 குடும்பங்களும் 25,000 பயனாளிகளும் இவ்வமைப்புக்களைச் சார்ந்து உள்ளனர். இது தவிர ஏனைய நான்கு மாவட்டங்களிலும் கணிசமான அளவு பயனாளிகள் இத்தொழிற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் தொடர்ச்சியாக மரவுரிமையில் சீவல் தொழிலாளர்கள்பட்ட இன்னல்களைப் போக்கி இத்தொழிலை நம்பியிருக்கும் தொழிலாளர்களினதும், அவர்தம் குடும்பங்களினதும் சமூக, பொருளாதார, கலை, கலாச்சார, கல்வி மேம்பாடுகளை பேணுவதே ஆகும். காலங்காலமாக முதலாளிகளினால் அல்லற்பட்டும், சுரண்டப்பட்டும், இப்பகுதிகளில் நிலவிவரும் சாதிய ஒடுக்கு முறைகளுக்கு உட்பட்டும் வாழ்ந்த இவர்களின் விடிவுக்காகவே இவ்வமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. இவர்களின் பிரதானமான தொழிலாக பனை தென்னை மரங்களிலிருந்து பெறும் சாற்று உற்பத்திகளில் பிரதானமாக கள், கருப்பநீர் என்பவற்றினை உற்பத்தி செய்வதும், விற்பனை செய்வதுமாகவே அமைந்துள்ளது. உண்மையில் இது ஒரு மதுசார்ந்த தொழிலாக இருந்த போதிலும், சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டதனாலும், மேற்கூறிய குடும்பங்களும் அவர்கள் சார்ந்து இருப்போரும் இதன்மூலம் கிடைக்கும் வருமானத்தை நம்பி இருப்பதாலும் இவர்கள் இத்தொழிலை செய்துவருகின்றனர். இதன்மூலம் இலாபம் உழைப்பது இவர்கள் நோக்கம் அல்ல. அதாவது வாழ்வாதார தேவைக்கான தொழிலாகவே இத்தொழில் அமைந்துள்ளது. கடந்த 42 வருடங்களில் இக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பல்வேறு முன்னேற்றங்களை தொழிலாளர்கள் அடைந்துள்ளனர். சமூக பாதுகாப்பு, கல்வி வளர்ச்சி, அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்தல், முன்பள்ளிச் செயற்பாடுகள், வீட்டு வசதி, மலசலகூட வசதி போன்ற கட்டுமானங்களின் வளர்ச்சி போன்றவற்றை இவற்றில் குறிப்பிடலாம். கடந்த 30 வருட கால யுத்தம் முடிவடைந்து போட்டிச் சந்தையை சங்கங்கள் சந்திக்கும் தற்போதைய கால நிலையில் பல்வேறு பிரச்சினைகளை சங்கங்கள் எதிர்நோக்குகின்றன. இவற்றுக்கு தீர்வுகாணப்பட எதிர்காலத்தில் திட்டங்கள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

## எதிர்நோக்கும் பிரச்சினைகள்

### கலால் வரி

அங்கத்தவர்களால் உற்பத்தி செய்யப்படும் கள்ளும், ஏனைய இதுசார் உற்பத்தியான சாராயமும் மதுபானம் என்ற வகையில் கலால் வரிக்கு உட்பட்டு பெருந் தொகையிலான வரியினை சங்கங்கள் செலுத்தவேண்டியுள்ளது. உண்மையில் அங்கத்தவர்களின் வாழ்வாதாரத்துக்கான வருமானத்துக்காகவே இவ் வுற் பத் திகள் செய்யப்படுகின்றன.

### சாராய உற்பத்தி

யாழ்.மாவட்டத்தில் 3 வடிசாலைகளில் மேற்கொள்ளப்படுகின்ற இயற்கை உற்பத்தியும், தொழிலாளர்களின் வருமானத்துக்காக செய்யப்படுவதுமான சாராய உற்பத்திக்கு பெரும் வரி அறவிடப்படுகின்றது. இதனால் இறக்குமதி செய்யப்படும் மதுசாரத்தை விட, உற்பத்தி செய்யப்படும் சாராயத்தின் விலை அதிகமாக உள்ளது. இதனால் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பனம் சாராயத்தினை விற்கமுடியாதுள்ளது. பெரும் தொகையான மதுசார வகைகள் 3 வடிசாலைகளிலும் தேங்கி உள்ளன. இதன் பெறுமதி சுமார் 80 மில்லியனை எட்டியுள்ளது. இப்பெறுமதியானது சீவல் தொழிலாளர்களின் உழைப்புக்காக வழங்க வேண்டிய பணமாகும்.

### போத்தற் கள் உற்பத்தி

சாராயம் போலவே போத்தற்கள்ளுக்கும் லீற்றர் ஒன்றுக்கு ரூபா 10.00 அறிவிடப்படுகின்றது. இதனால் உற்பத்திச் செலவு அதிகரிக்கிறது. இதேவேளை தனியார் துறையில் செயற்கையாக உற்பத்தி செய்யப்படும் கள்ளுக்குரிய செலவு குறைந்து சந்தையில் எமது கள்ளினை விற்பனை செய்யமுடியாத நிலை உள்ளது.

### கிளைகளை அகற்றும் நிலைவரம்

அங்கத்தவர்களின் உற்பத்திப் பொருளான கள்ளினை விற்பனை செய்வதற்காக அமைக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளை சில தனிநபர்களின் செயற்பாடுகளாலும், பொது நிறுவனங்களின் பெயரில் சில சுயநலவாதிகளின் செயற்பாடுகளினாலும் அகற்ற வேண்டிய நிலையும், அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்க முடியாத நிலையும், கள்ளுத் தவறணைகளை இடம் மாற்ற முடியாத நிலையும் காணப்படுகிறது.

### கமத்தொழில் காப்புறுதித் திட்ட உதவி நிறுத்தப்பட்டமை

அபாயகரமானதும், கடினமானதுமான சீவல் தொழில் செய்யும் அங்கத்தவர்களின் எதிர்கால நன்மை கருதி சங்கங்கள் மிகவும் சிரமப்பட்டு மேற்படித் திட்டத்தில் சீவல் தொழிலாளர்களை இணைத்து இருந்தார்கள். இதனால் பல அங்கத்தவர்கள் பயனடைந்து வந்தனர். தொடர்ந்தும் இத்திட்டத்தில் பயன்பெற பலர் காத்துள்ளனர். இந்த நிலையில் கடந்த ஓராண்டாக இத்திட்டம் நிறுத்தப்பட்டமையால் அங்கத்தவர்கள் ஆயிரக் கணக்கில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### தொழில் பாதிப்புக்கு உட்படுவோருக்கான நிவாரணம்

மிகவும் ஆபத்தான தொழிலாக இத்தொழில் அமைந்திருப்பதனால் தொழிற்படும்போது விபத்துக்கள் ஏற்பட்டு தொழிலாளர்கள் இறக்கும் நிலை உள்ளது. இவ்விழப்புக்களுக்கு சங்கங்கள், சமாசம், கொத்தணிகள் உதவியினை வழங்கிய போதிலும் இவை போதுமானது அல்ல. இதனால் இவர்களது குடும்பத்தினர்களின் வாழ்வாதாரத்திற்கான வருமானம், பிள்ளைகளின் கல்வி, ஏனைய நலன்கள் என்பன பாதிக்கப்படுகின்றன.

### மாற்று உற்பத்திகளுக்கான திட்டம்

மது சார்ந்த உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சங்கங்கள் பனையின் முழுப்பயனையும் பெறுவதற்காக மாற்று உற்பத்திகளிலும் ஈடுபட்டு வருகின்றன.

### வெல்லம், பாணி உற்பத்திகள்

மருத்துவ குணாம்சம் உள்ளதும், (7ம் பக்கம் பார்க்க)

## 91வது கூட்டுறவுதினத்தை முன்னிட்டு சமாசத்தால் நடத்தப்பட்ட கயிறிழுத்தல், துடுப்பாட்ட போட்டிகள்







# முன்மொழிவுகள் ................... 6ம் பக்கத் தொடர்ச்சி

தற்போதைய காலத் தேவைகளுக்கு உகந்ததும், சீனிக்கு மாற்றீடாக பயன்படுத்தக்கூடியதுமான இயற்கை உற்பத்தியாக சங்கங்களால் பனங் கட்டி, பனம்பாணி, சீனி, கல்லாக் காரம் போன்ற உற்பத்திகள் மேற் கொள்ளப்படுகின்றன. இதன்மூலம் பருவ காலங்களில் அங்கத்தவர் களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை சீர் செய்யவும், சமூகத்துக்குத் தேவையான இயற்கையான உற்பத் திகளையும் வழங்க முடிகின்றது. இதற்கு ஏற்படும் செலவீனம் அதிக மாக உள்ளது. இதனால் தொடர்ந்து இத்தொழிற்பாட்டைச் செய்வது பெரும் சவாலாக உள்ளது.

### உப உணவுப் பொருட்கள் உற்பத்தி

சங்கங்கள் இப்பகுதியில் செறிந்திருக்கும் பனை வளத்தின் மூலம் கிடைக்கும் பனம் பழத்தைக் கொண்டு பனாட்டு, பாணிப்பனாட்டு போன்ற நேரடி உற்பத்திகளையும், பனங்கிழங்கு, புழுக்கொடியல், ஒடி யல், ஒடியல்மா, புழுக்கொடியல் மா என்பவற்றினையும் உற்பத்தி செய்து வருகின்றன.

### பனம்தும்பு உற்பத்தி

இப்பகுதியில் செறிவாக உள்ள பனை மரங்களிலிருந்து மிக வும் தரம் வாய்ந்த, ஏற்றுமதிக்கான தரத்தில் பனம்தும்பு உற்பத்தி செய் யமுடியும்.

### பனங்கள், பதநீர் என்பவற்றை பதப் படுத்தி தகரப் பேணிகளில் அடைத்தல்

பனங்கள் மற்றும் பதநீர் என் பவற்றை பதப்படுத்தி அவற்றை ஏற் றுமதிக்கு ஏற்ற வகையில் தகரப் பேணிகளில் அடைப்பதற்குரிய தொழில்நுட்ப ஆலோசனைகளையும் அதற்குரிய இயந்திர உபகரணங்க ளையும் பெற்றுக்கொள்வதற்கு உத வுதல்.

### முன்மொழிவுகள்

### கலால் வரியை நீக்குதல்.

பனை வளத்திலிருந்து கூட்டு றவுச் சங்கங்கள் இலாப நோக்க மற்ற சீவல் தொழிலாளர்களினதும் அதில் தங்கியிருப்போரினதும் வாழ்வாதாரத்திற்கான வருமானத் தினை வழங்கவதற்காகவும் சமூக, பொருளாதார, கல்வி, அபிவிருத்தி யினை ஏற்படுத்தவதற்காகவும் மது சார்ந்த கள், சாராய உற்பத்தியில் ஈடுபடுவதாலும், வரி செலவீனத்தை அதிகரித்து உற்பத்தியை சந்தைப் படுத்த முடியாது சீவல்த் தொழிலா ளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதா லும் உள்ளூர் உற்பத்தி என்னும் வகையில் கலால் வரியை நீக்குதல் வேண்டும். இதனால் சுமார் 15,000 குடும்பங்களும், இதனைச் சார்ந்த வர்களும் எதிர்காலத்தில் பயன்பெற முடியும்.

கள்ளுத் தவறணையை அகற்று வதை நிறுத்துவது தொடர்பில் தீர்க் கமான நடவடிக்கையினை எடுத்தல். வேண்டும்.

கமத்தொழில் காப்புறுதித் திட்டத் தில் இணைந்த சீவல் தொழிலாளர் களுக்கு நிறுத்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும்.

தொழில் பாதிப்புக்கு உள்ளாகி மர ணம் அடைந்த, ஊனமுற்ற சீவல் தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் தொடர்ச்சியான சமூக நலத்திட்டங்கள் அமுல்படுத்த விசேட திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

### மாற்று உற்பத்திகளுக்கான திட்டங்கள்

பனை வெல்லம், பனம்பாணி, கிழங்கு உற்பத்திகள், பனம் தும்ப உற்பத்திகள் போன்றவற்றை தேசிய ரீதியில் அபிவிருத்தி செய்து மேம்ப டுத்துவதற்கு முயற்சி எடுக்க வேண் டும். இதன் மூலம் வேலையற்றிருக் கும் நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு வேலையையும், வரு வாயையும் வழங்க முடியும். இதற்கு அமைவாக பனை வளம் தேசிய வள மாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும். அதாவது தேயிலை, றப்பர், தெங்கு போன்று பனை வளமும் முறையான தேசிய வளமாக பிரகடனப்படுத்தப் பட்டு முறையான திட்டங்கள் அமுல் படுத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப் படவேண்டும்.

மேற்காட்டிய பிரச்சினைக ளை ஆராய்ந்து எமது முன்மொழிவு களை அமுல்படுத்த ஏதுவாக இது சார்பான ஒரு சபையை சங்கங்களின் பிரதிநிதிகள், பனை அபிவிருத்திச் சபை, கைத்தொழில் அதிகார சபை, என்பவற்றை உள்ளடக்கி அமைக்க வேண்டும்.

மேற்படி கோரிக்கைகளை வடமாகாணத்தில் உள்ள பனை வளம் சார்ந்த நிறுவனங்கள் சார்பாக சமர்ப்பித்து நிற்கின்றோம். இதற்கு அமைய நடவடிக்கை எடுத்து உதவு மாறு மிகவும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

## அச்சுவேலி பனை தெ.வள சங்கத்தின் 4வது நவீன கிளை நிலையமும் திறப்பு!



அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் 4வது நவீன கிளை நிலையம் புத்தூர் கிந்துசிட்டியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி சங்கத்தின் வருடாந்தம் ஒரு கிளை நவீன கிளையாக மாற்றியமைக்கும் திட்டத்தின்கீழ் 261ம் இலக்க இக்கிளை நிலையம் இம் மாதம் 16ம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொதுமுகாமையாளர் திரு பொ.செல்வராசா அவர்கள் தெரிவித்தார்.

## துயர் பகிர்கின்றோம்!

மலர்வு 15 – 08 – 1991



உதிர்வு 20 – 09 – 2013

எமது சங்கத்தின் பணியாளர்
திரு பொ.கிருஷ்ணன் அவர்களின் தவப்புதல்வன்

**அமரன் பொ.கி.இராகுலன்**

அவர்களின் மறைவையிட்டு ஆறாத் துயரில் தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்!

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்,
கோண்டாவில் பனை தென்னை வ.அ.கூ.சங்கம்

## சாவகச்சேரி ப.தெ.வ.கூ.சங்கத்துக்கு புதிய பொதுமுகாமையாளர் நியமனம்!

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய பொது முகாமையாளராக திரு க.நாகசுபாஜன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

## கிளைக்குழுத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன!

வடமாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு ஒத்திவைக்கப்பட்டிருந்த சங்கங்களின் கிளைகளுக்கான குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல்கள் மீண்டும் ஒக்ரோபர் மாதம் தொடக்கம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இம்முறை வாக்காளர் இடாப்பில் உறுப்பினரின் தரமும் சுட்டிக்காட்டப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.


**அங்கத்தவர் நலத்திட்டம்**

- ஓய்வூதியம், மரணக் கொடுப்பனவு வழங்கல்
- குறைந்த வட்டியில் அங்கத்தவர்களுக்கான கடன் வழங்கல்.
- அங்கத்தவர், பணியாளர் கௌரவிப்பு.

**கிராமிய வங்கிச் சேவை**

- அங்கத்தவர், அங்கத்தவர் அல்லா சேமம்.
- நிலையான வைப்புக்கள்.
- ஓய்வூதியச் சேவை.

**சமூகம்சார் சேவைகள்**

- அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளின் கல்வி செயற்பாடுகளுக்கு ஊக்குவிப்பு நிதி மற்றும் பாடசாலை உபகரணம் வழங்கல்(புலமைப்பரிசில் சித்தியடைதல், பல்கலைக்கழக அனுமதி கிடைத்தல், கல்வியியல் கல்லூரி அனுமதி கிடைத்தல்)
- முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்த வேதனம் வழங்கல்.

**வாடகைச் சேவை**



- வாடகை உழவு இயந்திரம்
- வாடகை கடை
- வாடகை பிளாஸ்ரிக் கதிரைகள்



- நிழற்படப் பிரதியாக்கல்



**கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**
(வரையறுக்கப்பட்டது)

பருத்தித்துறை வீதி, கோப்பாய்

தொலைபேசி: 021 223 0395


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2013ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வெளியிடப்பட்டது.